# நெல் சந்தைப்படுத்தல் சபை-2011

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட முக்கியமான விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் நிலைமை

சபை மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நெல் இருப்பு அனேகமாக குறைந்த விலையில் விற்பனை செய்வதால் அடுத்த போகத்தில் நெல் கொள்வனவு செய்வதற்குத் தேவையான பணத்தை பெற்றுக்கொள்ளல் மற்றும் விற்பனையிலான நட்டங்களைத் தீர்த்துவைப்பதற்காக திறைசேரியிலிருந்தும் வங்கிகளிலிருந்தும் கடன் பெற்றுக்கொள்ளும் முறையொன்று தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டிருந்தது. இந்நிலைமை காரணமாக சபை தொடர்ந்தியங்குதல் நிச்சயமற்றது என்பது அவதானிக்கப்பட்டது.

#### 1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு நிமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 05 இன் பிரகாரம் நெல், சோயா போஞ்சி மற்றும் அரிசி இருப்புக்களின் கிரயம் அல்லது தேறிய கைக்கெட்டிய பெறுமதி என்பவற்றில் குறைந்த பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ஆண்டின் இறுதியில் பிராந்திய முகாமையாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட அறிக்கையின் அடிப்படையில் ரூபா 4,555,081,250 ஆன இருப்புக்கள் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் பணிக்கொடைக் கொடுப்பனவிற்கு நிதிஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இன் பிரகாரம் காணி, கட்டிடங்கள் என்பன வெவ்வேறாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 13,710,714 கிரயமான காணி மற்றும் கட்டிடங்கள் ஒரே மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. அக்கிரயத்தின் அடிப்படையில் ஆண்டொன்றிற்கு 2.5 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பவற்றின் மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 277,911,624 மற்றும் ரூபா 166,994,520 என்ப இனங்காணப்படாமல் தொங்கல் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், 2009 ஆம் ஆண்டின் பின்னர் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களினால் உருவான ரூபா 1,135,701 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் ரூபா 26,239,640 பெறுமதியான பொறுப்புக்களும் தொங்கல் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) கடன் வட்டியைச் செலுத்துவதற்காகவும் நெல் குற்றுவதற்கான கூலி மற்றும் போக்குவரத்துக் கட்டணத்திற்காக திறைசேரியிலிருந்து கிடைத்த முறையே ரூபா 346,190,000 மற்றும் ரூபா 110,000,000 இலிருந்து முறையே ரூபா 307,263,861 மற்றும் ரூபா 91,321,775 தொகைகள் தீர்க்கப்பட்டு எஞ்சிய ரூபா 57,604,384 கூட்டுத்தொகையான பணம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) வருமானக் கூற்றில் அரிசி விற்பனையின் கிரயத்தை தவறாக கணக்கீடு செய்த காரணத்தால் விற்பனைக் கிரயம் ரூபா 601,547,073 ஆல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆண்டின இலாபம் அத்தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) வாழ்க்கைச் செலவு மற்றும் உணவு பாதுகாப்புக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் வரிசை அமைச்சு செயலாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான ரூபா 1,281,892,217 பெறுமதியான அரிசி உணவு ஆணையாளர் திணைக்களத்தின் களஞ்சியங்களில் வைப்பதற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தன. அந்த அரிசி இருப்பு முழுவதும் பிழையாக மீளாய்வாண்டின் விற்பனையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த மொத்த இருப்பில் ரூபா 611,986,069 பெறுமதியான அரிசி இருப்பொன்று 2011 திசெம்பர் 31 வரையில் விற்பனை செய்யப்படாமல் களஞ்சியங்களில் எஞ்சியிருந்தன.

(உ) மூலதனச் செலவினத்திற்காக திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 182,900,000 தொகை வருமானக் கூற்றில் ஏனைய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் இலாபம் அதற்குச் சமமான தொகையால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய களஞ்சிய குத்தகை வாடகை ரூபா 3,697,500 கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட 08 நிர்மாணங்களுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 71,076,719 தொகை நடைமுறை வேலையாக அல்லது காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யாமல் நிதிக்கூற்றுக்களில் முற்பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) நீண்டகாலமாக முன்கொண்டு வரப்படுகின்ற கடன்பட்டோர் மீதிகளின் அடிப்படையில் போதியளவு அறவிடமுடியாக்கடன் மற்றும் ஐயக்கடனுக்காக நிதிஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2009 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வரும் ரூபா 10,591,838 தொகை உட்பட 08 அரச நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,086,844,771 தொகையிலிருந்து 2013 செப்தம்பர் 24 ஆம் திகதி வரையில் சபை ரூபா 579,247,996 மட்டுமே அறவிட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 507,596,775 ஆன தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டிலிருந்து 06 நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 20,795,578 உட்பட கிடைக்க வேண்டிய ரூபா 150,676,283 ஆன முற்பணத்தை அறவிடுவதற்கு சபை 2013 செப்தம்பர் 30 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காண்பிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கும் முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் இல்லாமையின் காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு அல்லது மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது.

| கணக்குவிடயங்கள் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 13,710,714 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, உரித்து உறுதி |
| நெல் சோயா போஞ்சி, அரிசி மற்றும் வழிச் சரக்குகள் | 4,555,191,889 | இருப்பு பதிவேடு, இருப்பு மெய்மையாய்வு அறிக்கை, வழிச் சரக்கை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |
| அரிசி, நெல் மற்றும் சோயா போஞ்சி விற்பனை கடன்பட்டோர் | 1,086,844,771 | கடன்பட்டோர் பதிவேடுகள், காலப் பகுப்பாய்வு, மீதி உறுதிப்படுத்தல் கள் |
| வங்கிக் கடன் மற்றும் திறைசேரி முற்பணம் | 5,487,454,030 | காலப் பகுப்பாய்வு, மீதி உறுதிப்படுத்தல்கள் |
| வங்கி மேலதிகப் பற்று | 247,131,449 | அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்குரிய விபரங்கள், மீதி உறுதிப்படுத்தும் ஆவணங்கள் காலப் பகுப்பாய்வு, |
| முதலீடுகள் | 283,044,402 | முதலீட்டுச் சான்றிதழ் மற்றும் காலப் பகுப்பாய்வு |
| முதலீட்டு வட்டி வருமானம் | 14,549,943 | வட்டி வருமானம் கணக்கிடப்படபட்ட விதம் |

## 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(5) (டி) பிரிவு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டுடன் குறைந்தது உள்ளகக் கணக்காய்வு நிழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டிய போதிலும், சபையால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 135-139 | நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக கடமைளை பொறுப்பளித்தல் மற்றும் நிதி அதிகாரப் பகிர்வு சபையால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 188(2) | மீளாய்வாண்டில் வங்கியில் வைப்புச் செயப்பட்ட ரூபா 12,140,745 பெறுமதியான 07 காசோலைகள் 2012 ஆகஸ்ட் மாதம் வரையில் தேறப்படாதிருந்தமை தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்திருப்பதாக தலைவரால் கணக்காய்விற்கு தெரியப்படுத்தியிருந்த போதும், அக்காசோலைகள் 2013 செப்தம்பர் 30 ஆம் திகதி வரையில் தீர்வு செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2007 யூலை 25 ஆந் திகதிய 07/1199/315/31 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | இலங்கை விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் அதிகாரசபை கலைக்கப்பட்டு அதிகாரசபைக்குச் சொந்தமான சகல சொத்துக்களும் பொறுப்புக்களும் 2007 யூலை 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சபைக்கு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 184,658,970 ஆன நிலையான வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், கையிலுள்ள காசு மீதி, ஊழியர் முற்பணம் போன்ற சொத்துக்கள் மாத்திரம் கையளிக்கப்பட்டடிருந்ததுடன் ஏனைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றைக் கையளிப்பதற்கும் அதிகார சபையின் கலைத்தல் செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | வரைபு ஆண்டறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| (உ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 756 | ரூபா 13,710,714 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் 6 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2010 திசெம்பர் 16 ஆம் திகதிய அமைப/ 10/2762/447/013 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | திறைசேரியிலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 2,000 மில்லியன் தொகையான முற்பணத்தை அரிசி விற்பனையிலிருந்து கிடைக்கும் தொகையிலிருந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது அரிசி விற்பனையால் கிடைத்த ரூபா 708,232,048 தொகையிலிருந்து இம்முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஐ) | தாபன விதிக்கோவையின் VI ஆம் அத்தியாயம் | சேர்க்கப்பட்ட 04 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகள் பூர்த்தி செய்யப்படாமையால் அதில் மருத்துவ அறிக்கைகள், சம்பள ஏற்ற அங்கீகாரம், கடமைகள் மற்றும் நடத்தை என்பன திருப்திகரமாக நிறைவேற்றப்பட்டமைக்கான அறிக்கைகள் ஆகியன உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஒ) | 1988 இன் 74 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தும் சட்டம் | மேலே குறிப்பிடப்பட்ட 04 உத்தியோகத்தர்களால் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தும் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையின் செயற்பாட்டு இலாபம் ரூபா 264,125,792 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செயற்பாட்டு நட்டம் ரூபா 346,747,035 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 610,872,827 தொகையான முன்னேற்றம் சுட்டிக்காட்டப்பட்டது. எவ்வாறாயினும் இந்த அறிக்கையின் 2.2.3 இன் (ஆ) முதல் (ஊ) பந்திகளில் கூடுதலாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 247 மில்லியன் தொகையை செம்மையாக்கினால் மீளாய்வாண்டிற்கான இலாபமான ரூபா 264 மில்லியன் ரூபா 17 மில்லியன் வரை குறைவடைந்திருக்கும்.

### 2.2 செலவினங்களில் வழமைக்கு மாற்றமான அதிகரிப்பு

2011 ஆம் ஆண்டில் சபை கடன்தொகை அடிப்படையில் செலவிட்ட மொத்த நிதிக் கிரயம் ரூபா 329,644,154 ஆக இருந்ததுடன், அது மொத்த வருமானமான ரூபா 631,978,105 இன் சதவீதமாக எடுக்கும் போது 52 சதவீதமாகும். எவ்வாயினும் 2011 ஆம் ஆண்டின் வருமானத்தில் திறைசேரியிலிருந்து மீண்டுவரும் செலவினத்திற்காக கிடைக்கப்பெற்ற ரூபா 554,090,000 மானியங்களும் இருந்தன. அதன் பிரகாரம் அவற்றை நீக்கிய தேறிய இலாபமான ரூபா 77,888,105 உடன் ஒப்பீடு செய்தால் மொத்த நிதி கிரயம் மொத்த வருமானத்தில் 423 சதவீதமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 11,955 மில்லியன் செலவு செய்து 400,000 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 2,278 மில்லியன் செலவிட்டு 80,144 மெட்ரிக் தொன் நெல் மட்டும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அது இலக்கிடப்பட்ட அளவில் 20 சதவீதமாக இருந்தது. நெல் கொள்வனவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 47 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் சிறுபோகம் மற்றும் பெரும்போகங்களில் நெல் கொள்வனவு முறையே 78 சதவீதம் மற்றும் நூற்றுக்கு 84 சதவீதத்தால் சபையால் நாட்டரிசி நெல் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், தேசிய ரீதியில் கூடுதலாகப் பயன்படுத்தப்படும் சம்பா நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சபையால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் வகைகள் சதவீதங்களின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| போகம் | சம்பா | நாடு | மொத்தக் கொள்வனவு | மொத்த கொள்வனவின் ஒவ்வொரு வகை நெல் கொள்வனவின் சதவீதம் | |
|---|---|---|---|---|---|
| | மெ.தொன்.. | மெ.தொன் | மெ.தொன் | சம்பா | நாடு |
| | | | | % | % |
| சிறுபோகம் | 16,516.9 | 60,103.9 | 76,620.8 | 22 | 78 |
| பெரும்போகம் | 556.6 | 2,967.4 | 3,524.0 | 16 | 84 |

(இ) நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் மொத்த நெல் உற்பத்தியில் ஆகக் குறைவாக 5 சதவீதத்திற்கும் 10 சதவீதத்திற்கும் இடைப்பட்ட சதவீதத்தில் சபையால் நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வது அரசின் இலக்காக இருந்த போதிலும், அந்த இலக்கை அடைவதற்கு சபை தவறியிருந்தது. வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2010 சிறுபோகத்தை தவிர்த்து மொத்த நெல் உற்பத்தியில் நெல் கொள்வனவின் சதவீதம் நூற்றுக்கு 5 இற்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2009/2010 பெரும் போகம் | 2010 சிறு போகம் | 2010/2011 பெரும் போகம் | 2011 சிறு போகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | மெ.தொன் | மெ.தொன் | மெ.தொன் | மெ.தொன் | மெ.தொன் |
| மொத்த உற்பத்தி | 2,630,000 | 1,671,000 | 1,996,000 | 1,879,000 | 8,176,000 |
| சபையால் நெல் கொள்வனவு செய்தல் | 73,192 | 115,714 | 3,524 | 76,621 | 269,051 |
| மொத்த உற்பத்தியில் சபையின் நெல் கொள்வனவு சதவீதம் | 2.8 | 6.9 | 0.2 | 4.1 | 3.3 |

(ஈ) சபையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையின் பிரகாரம் அரிசி உற்பத்திக்காக பழைய நெல் இருப்பு முதலாக விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும், அதனைக் கருத்திற் கொள்ளாமல் பழைய இருப்பு களஞ்சியத்தில் இருக்கையில் புதிய நெல் இருப்பு விநியோகிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேலுள்ள ஏற்றுக்கொள்ள நடைமுறைக்கு முரணாக ரூபா 73,548,914 பெறுமதியான 2,626,113 கி.கிராம் பழைய நெல் இருப்பு களஞ்சியத்தில் இருக்கையில் ரூபா 85,048,150 பெறுமதியான 3,032,005 கி.கிராம் புதிய நெல் விநியோகிக்கப்பட்டிருந்தன.

(ii) பழைய நெல் இருப்பினை விநியோகிக்காமல் களஞ்சியத்தில் வைத்திருந்தமை காரணமாக நிறம் மாறுதல், பூச்சியால் சேதம், இருப்பு காலாவதியாதல் மற்றும் பழுதடைதல், இருப்புக்கள் அழிவடைதல், கழிவுப்பொருள் கலத்தல் மற்றும் அவற்றின் பராமரிப்பிற்காக சபைக்கு மேலதிக கிரயமொன்றை செலவிடுவதற்கு நேர்ந்திருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) சபைக்குச் சொந்தமான உணவு ஆணையாளர் திணைக்களத்தின் களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த அரிசி 4 தனியார் கம்பனிகளுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்தமையால் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 369.49 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. இந்த விற்பனை சபையினால் மேற்கொள்ளப்படாததாகவும் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உணவு ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டதாகவும் சபையின் தலைவரால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) 1971 இன் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபை அதிகாரச்சட்டத்தின் 3 மற்றும் 10 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நெல் மற்றும் அரிசி குத்துதல், பிரித்தல் மற்றும் தயாரித்தல் முயற்சிகளை நடாத்துதல் மற்றும் தனியாார் நெல் ஆலைகளைப் பதிவு செய்யும் செயற்பாடுகள் என்பன அமுல்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே முறையற்ற விதத்தில் தெரிவு செய்யப்பட்ட நெல் ஆலை உரிமையாளர்களுக்கு ரூபா 1,340,648,888 பெறுமதியான நெல் வருடாந்தம் விநியோகிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 67,706,816 பெறுமதியான நெல் இருப்பிற்குரிய அரிசி சபைக்கு மீள கிடைத்திருக்கவில்லை. இந்த நெல் இருப்பானது நிதிக்கூற்றுக்களில் வழிச் சரக்காக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) சபையினால் பயன்படுத்தப்படுகின்ற களஞ்சியக் கட்டிடங்கள் மற்றும் அதற்குரிய 142 காணிகளின் உரித்தை உறுதிப்படுத்துவதற்கும் வெளித்தரப்பினரால் அத்துமீறி பயன்படுத்தப்படுகின்ற 44 கட்டிடங்களின் சிக்கல் இல்லாத உரித்தை பொறுப்பேற்கவும் மீளாய்வாண்டின் போதும் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டினுள் நெல் இருப்புக்களை காப்புறுதி செய்வதற்காக ரூபா 3,255,329 தொகை காப்புறுதி நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், காப்புறுதி நிறுவனம் வழங்கிய அறிவுறுத்தல்கள் மற்றும் நியதிகளின் பிரகாரம் நெல் இருப்பினை களஞ்சியப்படுத்தாத காரணத்தால் நெல் இருப்பிற்கு ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் என்பவற்றிற்காக இழப்பீட்டு தொகையைப் பெற்றுக்கொள்ள சபை தவறியிருந்தது.

**3.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

---------------------------------------------------------------

(அ) குத்தகை உடன்படிக்கையின் அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த சபைக்குச் சொந்தமான 19 களஞ்சியக் கட்டிடங்களில் 07 இன் உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்த போதிலும், இக்கட்டிடங்களை மீண்டும் பொறுப்பேற்கவோ அல்லது குத்தகையை புதுப்பிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக பழைய குத்தகையாளர்களால் 2013 செப்தம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கொடுப்பனவொன்று மேற்கொள்ளாமல் கட்டிடங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) அந்த 19 கட்டிடங்களில் 16 இன் குத்தகை வாடகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலுவையாக இருந்ததுடன், நிலுவையாக இருந்த வாடகை ரூபா 5,173,950 ஆக இருந்தது. இதில் ரூபா 3,641,250 தொகை 02 ஆண்டுகள் முதல் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்தது. இந் நிலுவை வாடகையை அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கைகளை 2013 ஒக்தோபர் 14 ஆம் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 04 களஞ்சியக் கட்டிடங்களில் ரூபா 3,036 தொகையான பழைய நிலுவை வாடகை அறவிடப்படாமல் 2011 ஆம் ஆண்டிற்குரிய குத்தகை மட்டும் அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் முன் அங்கீகாரம் இல்லாமல் தனியார் கம்பனியொன்றினால் கட்டிடத்திற்கு மேற்கொண்ட திருத்த வேலைகளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 6,314,659 தொகையை குத்தகை வாடகையிலிருந்து மாதாந்தம் ரூபா 30,000 வீதம் எதிரீடு செய்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபை இழந்த முழு குத்தகை வாடகை ரூபா 360,000 ஆக இருந்தது.

## 3.5 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்

சபையால் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்த நெல் இருப்புக்கள் தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள முறைகேடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையால் உடன்படிக்கையின் பிரகாரம் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு விநியோகிப்பதற்கு முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கியொன்றின் 90 நாட்கள் செல்லுபடிக் காலமொன்றுடன் கூடிய நிபந்தனையற்ற பிணைப்பொறுப்பொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், எந்த நெல் ஆலை உரிமையாளர்களிடமிருந்தும் அவ்வாறான ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. இவ்வங்கிப் பிணைப்பொறுப்பிற்காக திகதி, பெறுமதி என்பன குறிப்பிடப்படாமல் வெற்றுக் காசோலையொன்று சபையால் பெற்றுக்கொள்ளப்பட்டு ரூபா 1,340,648,888 பெறுமதியான நெல் அவர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இதன் மூலம் அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்படவில்லையென்பது கணக்காய்வின் போது மறுக்க முடியாததாக இருந்தது.

(ஆ) சில ஆலை உரிமையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காசோலைகளுகக்காக வெவ்வேறு காரணங்கள் அடிப்படையில் வங்கியால் கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டிருந்தது. எனினும் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக எவ்வித சட்டரீதியான நடவடிக்கையும் 2013 ஒக்தோபர் 14 ஆம் திகதி வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் கொடுப்பனவுகளை நிராகரித்த காசோலைகளின் பெறுமதி ரூபா 3,742,220 ஆக இருந்தன.

(இ) நெல் இருப்புக்களை களஞ்சியங்களிலிருந்து விநியோகிக்கும் போது வழங்கல் கட்டளைகளின் பிரதிகள் மற்றும் களஞ்சியங்களிலிருந்து விநியோகிக்கும் போது வழங்கல் பற்றுச்சீட்டு எந்நேரமும் ஒப்பிடப்பட்டு அதற்குரிய எதிர்கால நடவடிக்கைகளை எடுக்காமை உரிய அறிக்கைகளைப் பராமரிக்காமை, முறையற்ற விதத்தில் நெல் ஆலை உரிமையாளர்களை தெரிவுசெய்தல் மற்றும் உரிய கட்டுப்பாட்டு முறையொன்றை அறிமுகப்படுத்தாமை போன்ற காரணங்களால் வெவேறு வகையான மோசடிகள் மற்றும் முறைகேடுகளுக்கு இடமளிக்கப்பட்டிருந்தன.

## 3.6 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) 2008 ஆம் ஆண்டில் இலங்கை விவசாய உற்பத்தி விற்பனை அதிகாரசபையால் நெல் விற்பனையிலிருந்து கிடைத்த பணத்தை வைப்பிலிடுவதற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த சேமிப்புக் கணக்கு 2010 ஏப்ரல் 26 ஆம் திகதி முதல் சபைக்கு பொறுப்பளிக்கப்படாமல் இருந்ததுடன், அத்திகதியில் மீதி ரூபா 5,338,284 ஆக இருந்தது. அத்திகதியில் இருந்து 2013 செப்தம்பர் 30 ஆம் திகதி வரை இப்பணம் வினைத்திறனான முதலீடொன்றில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை ஐக்கிய பத்திரிகை கம்பனியின் பங்குகளில், சபையால் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 127,000 பெறுமதியான பங்குகள் 2011 திசெம்பர் 31 இல் தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன், அதற்குரித்தான நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வங்கி மேலதிகப் பற்று மற்றும் கடன் மீதி என்பவற்றை தீர்க்கப்படாததன் அடிப்படையில் மீளாய்வாண்டில் மேலதிகப் பற்று வட்டியாக ரூபா 22,380,293 தொகையும் வங்கிக் கடன் வட்டியாக ரூபா 307,263,860 தொகையும் சபையினால் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) கிரயம் அதிகரிப்பு ஏற்படுகின்றது என்பதைக் காரணம் காட்டி நெல் இருப்பினை வருடாந்தம் மெய்மையாய்வு செய்வதற்கு சபை தவறியிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட நெல் முழுமையாக விநியோகிக்கப்பட்டதன் பின்னர் நெல் இருப்பு பற்றாக்குறையை கணக்கிடுவது சபையின் செயற்பாடாக இருந்தது. எவ்வாறாயினும் சபையின் நெல் கொள்வனவு நடவடிக்கை செயற்படுத்தப்பட்டு சபையின் பதவியணியினரால் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டிருந்த 2009/2010 பெரும் போகத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்பு 2012 யூன் 15 ஆம் திகதி வரையில் அதிகளவிலான களஞ்சியங்களில் விநியோகித்து முடிவடைந்திருந்ததுடன், அந்தப் போகத்தில் நெல் இருப்பு பற்றாக்குறையை கணக்கிடுவதற்கு கணக்காய்விற்கு முடியுமாக இருந்தது. அதன் பிரகாரம் அநுராதபுர வலயத்தில் பரிசோதனைக்கு உட்படுத்திய 12 களஞ்சியங்களில் நெல் பற்றாக்குறை 296,876 கி.கிராம் ஆக இருந்தது. அதன்

கிரயம் ரூபா 8,312,528 ஆகும். ஆதலால் சபைக்குரிய ஏனைய 130 களஞ்சியங்களில் இவ்வாறான பற்றாக்குறை இல்லாதிருக்கும் என்பதை கணக்காய்வின் போது நிராகரிக்க முடியாது.

**3.8 பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்ட கட்டளைகளை செயற்படுத்தாமை**

பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்ட கட்டளைகளை செயற்படுத்தாமை தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 திசெம்பர் 05 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் 06 மற்றும் 15 ஆம் கட்டளைகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமெனவும் அதுவரை வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் கணக்காய்வு செய்யப்பட வேண்டுமெனவும் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய எந்த அறிக்கையும் 2013 செப்தம்பர் 30 ஆம் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 14 ஆம் இலக்க கட்டளையின் பிரகாரம் 2008 ஆம் ஆண்டிற்கு முன்னரிலிருந்து காணப்படும் இனங்காணப்பட முடியாத கடன்பட்டோர் மீதியை இனங்காண்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டு அக்குழுவின் பரிந்துரை அடிப்படையிலோ, அல்லது உரிய அங்கீகாரத்தின் அடிப்படையிலோ பதிவழிக்கப்பட்டு புதிய ஐந்தொகையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்படி கட்டளைகளின் பிரகாரம் எதிர்காலத்தில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இனங்காணக்கூடிய நிலையான சொத்துக்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் தொடர்பான பதிவேடுகளைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட உருப்படிகளுக்காகவும் விபரமான பட்டோலைகளைச் சமர்ப்பிப்பதற்கு சபை தவறியிருந்த காரணத்தால் அத்தேவைப்பாடு தொடர்ந்தும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.9 பதவியணியினர் நிர்வாகம்

சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 134 ஆக இருந்த போதிலும், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பதவியணியினர் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பாக சரியான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) இடைநிலை முகாமை மட்டத்தின் பிராந்திய முகாமையாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 07 ஆக இருந்ததுடன், அந்த அனைத்து பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. அப் பதவிகளில் பதில் கடமை புரிவதற்காக உதவி பிராந்திய முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டு 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அப்பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் நெல் இருப்பினை களஞ்சியப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் களஞ்சியங்களின் எண்ணிக்கை 180 ஆக இருந்ததுடன், இருப்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த உதவி பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் களஞ்சிய உதவி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 78 ஆக இருந்தது. புதிய பதவிகளை அங்கீகரித்துக் கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் தலைமை நிறைவேற்றுனர் பதவியொன்றான பொது முாமையாளர் பதவிக்காக 2011 மே 03 ஆம் திகதி ஒரு உத்தியோகத்தர் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அது முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இப்பதவிக்குரிய கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் என்பவற்றை பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததால், இந்நியமனம் சர்சைக்குரிய நியமனம் ஒன்றாக இருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 15 மாதங்களின் பின்பு 2013 மே 13 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்படுகின்றவாறு பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பாதீட்டில் செலவின வகைப்படுத்தல்களும் நிதிக் கூற்றுக்களில் வகைப்படுத்தப்பட்டதற்கு நேரொத்ததாக இன்மையினால் மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கிடையேயான முரண்களைக் கணிப்பீடு செய்ய முடியாதிருந்தன. அதன் பிரகாரம் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவருக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுபாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஊ) பதவியணியினர்
(எ) நெல் ஆலை உரிமையாளர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்